**Starting time 11.31 A.M.**

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 78/2020**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 29.04.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருஷ்ணமூர்த்தி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling: | | Age | : |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**: எனது சகோதரர் ராமச்சந்திரன் லட்சமி வகையறாவிடமிருந்து பெற்ற பதிவு செய்யப்படாத கிரய ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். என் சகோதரர் ராமச்சந்திரன் கிரயம் பெற்றதாக கூறப்படும் சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று எனது வழக்கில் நான் சொல்லவில்லை என்றால், ஒரே குடும்பம் என்பதால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன்.

2. என் சகோதரர் ராமச்சந்திரன் இந்த வழக்கில் தரப்பினர் அல்ல என்றால், ஆமாம். எனக்கு எதிராக மட்டும் தான் அறிவிப்பு வந்தது அதனால் நான் மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.13-ல் எனக்கு சார்வு செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக சொல்லப்படும் அறிவிப்பை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல, உயர்நீதிமன்றத்தில்

தாக்கல் செய்துள்ளேன்.

3. அசல் வழக்கு எண். 112/2014 -ல் தரப்பனிராக உள்ள சிவபாக்கியம் மற்றும் மாதேஸ் இருவரையும் இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சிவபாக்கியம் இறந்துவிட்டார், மாதேஸ் எனக்கு நேரடியாக எந்த தொந்தரவும் செய்யாததால் சேர்க்கவில்லை. அரசு நிலம் என்னுடைய அனுபவத்தில் தான் இருக்கிறது என்பதை காட்ட நீதிமன்ற ஆணையர் நியமனம் பெறவில்லை என்றால், நான்தான் சுவாதீனத்தில் இருக்கிறேன் என்பதை குறிப்பிட்டுதான் பிரதிவாதிகள் குறிப்பிட்டுதான் எனக்கு பிரிவு 7-ன் கீழ் அறிவிப்பு அனுப்பியுள்ளனர்.

4. புல எண். 18/4 -ல் உள்ள தாவா சொத்து அரசு புறம்போக்கு நிலம் என்றாலும், அதை நான் அனுபவித்து வருவதே தவறு என்றாலும், சரியல்ல. 02.06.1992 தேதியன்று அந்த நிலம் கிராம நத்தமாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கிராம நத்தமாக இருந்த போதிலும் அது அரசு நிலம் என்பதால், அதில் நான் விவசாயம் செய்வதே தவறு என்றால், சரியல்ல. தாவா சொத்தே அரசு நிலம் என்பதால் பிரதிவாதிகள் உள்ளே நுழையக்கூடாது என்று பரிகாரம் கேட்கவே எனக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றால், சரியல்ல.

5. நான் கேட்டுள்ள பரிகாரமும் நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணமும் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதால் இந்த வழக்கே நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் அனுப்பியுள்ள நில அபகரிப்பு சட்டத்திற்கு கீழான அறிவிப்பை பொறுத்து நான் எந்த வித நீதிமன்ற நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என்றால், நீதிப்போராணை மனு தாக்கல் செய்தேன். அதில் எனக்கு வழங்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். இந்த நீதிமன்றத்திலும் அந்த அறிவிப்பு பொறுத்து எந்த பரிகாரமும் நான் கோரவில்லை என்றால், சரியல்ல.

6. சட்டத்திற்கு முரணாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் இவ்வழக்கு

நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. தாவா சொத்தானது அரசாங்கத்திற்கு சொந்தமான சொத்து என்பதால் அதை விற்கவோ, உரிமை கொண்டாடவோ வாதிகளுக்கோ, அதை வாங்கியவர்களுக்கோ எந்த வித உரிமையும் இல்லை என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

Ending Time: 11.44 A.M

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**